**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**
**முன்னிலை: திருமதி.S.சப்னா, B.B.M.L.L.M.,**
**நீதித்துறை நடுவர், பல்லடம்.**
**2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் நாள் வியாழக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 12 ஆம் நாள்**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.196/2015**
**CNR.No.TNTI11– 000231 –2015**

அரசுக்காக:
காவல் ஆய்வாளர்,
பல்லடம், காவல்நிலையம்
(குற்ற எண்.236/2014) – குற்றமுறையீட்டாளர்

//எதிர்//

1) கார்த்திக் (வயது 25),
த/பெ. மருதையன்,
பர்மாகாலனி,
திருவெறும்பூர், திருச்சி.
<u>தற்போதைய முகவரி</u>
க.எண்.1/385 விநாயகர் கோவில் வீதி,
அறிவொளி நகர், பல்லடம்.

2) நாகேந்திரன் (வயது 24),
த/பெ. மோகன்குமார்,
ஈஸ்வரன் கோவில் பின்புறம்,
திருப்பூர்.
<u>தற்போதைய முகவரி</u>
க.எண்.1/929 மாரியம்மன் கோவில் வீதி,
அறிவொளி நகர்,
பல்லடம். .... எதிரிகள்

**குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், பல்லடம்**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.196/2015**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட ROC. No. 814/2020 F1 (P.Dis.No.36/2021) படியும் விதி 106 Criminal Rules of Practice – 2019 ன்படியும் வழக்கின் தொகுப்பு கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | Case summary | | | |
|---|---|---|---|---|
| (I) | The Period of remand of the accused | Name of the accused | Date of Remand | Release on |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 1) Karthick<br>2) Nagendhiran | 27.11.2014<br>27.11.2014 | 03.06.2015<br>06.05.2015 |
| (ii) | Date of filling of the complaint/ final report in the court | Filling of Complaint | Filing of Final report | |
| | | Complaint Statement on 16.03.2014 | பல்லடம் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் 23.09.2015 தேதியன்று தாக்கல் செய்யப்பட்டது. | |
| (iii) | Date of Committal of the case to the court of Sessions | Not applicable | | |
| (iv) | Date of Questioning of the accused under section 457,380,511 of IPC as the case may be | 12.07.2016 | | |
| (v) | Filing of all Miscellaneous petitions and their results | Crl.M.P.No. | Date of filing | Result |
| | | Cmp.No.5339/2014 | 01.12.2014 | Allowed |
| | | Cmp.No.608/2015 | 11.02.2015 | Returned |
| | | Cmp.No.735/2015 | 17.02.2015 | Allowed |
| | | Cmp.No.2608/2015 | 12.05.2015 | Allowed |
| | | Cmp.No.4355/2015 | 22.07.2015 | Allowed |
| | | Cmp.No.2134/2017 | 12.04.2017 | Allowed |
| | | Cmp.No.2135/2017 | 12.04.2017 | Allowed |
| | | Cmp.No.2136/2017 | 12.04.2017 | Allowed |
| | | Cmp.No.3000/2017 | 14.06.2017 | Allowed |
| | | Cmp.No.3001/2017 | 14.06.2017 | Allowed |
| | | Cmp.No.5505/2022 | 15.12.2022 | Allowed |
| | | Cmp.No.417/2024 | 03.09.2024 | Allowed |
| (vi) | Date of Examination in chief and cross | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1- Santhoshkumar | 19.12.2019 | - |
| | | PW2-Ramachandhiran | 19.12.2019 | - |
| | | PW3- Sivaraman | 04.01.2021 | 04.01.2021 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | PW4- Kumarasamy | 16.03.2021 | - |
| | | PW5- Murugesan | 27.01.2026 | - |
| | | PW6- Jeyadevi | 27.01.2026 | 27.01.2026 |
| (vii) | Date of Examination of the accused under section 313 of the Code | | | 10.02.2026 |
| (viii) | Details of abscond of an accused and his appearance/production, as the case may be | | | Nil |
| (ix) | Grant of stay by Superior Courts and the results there of | | | Nil |

இந்த வழக்கானது கடந்த 23.03.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசுகுற்றத்துறை வழக்கறிஞர் நிலை 1 திரு.எஸ்.செந்தில்குமார், அவர்களும், 1ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.திருக்குமரன், அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ராஜேஷ், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் மற்றும் வழக்குஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இறுதியாக இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**தீர்ப்புரை**

(1)கடந்த 15.03.2014ம் தேதி இரவு சுமார் 11.00 மணிக்கு பல்லடம் பகுதிக்குட்பட்ட காரணம்பேட்டை KPR காம்பளக்ஸில் உள்ள சாட்சி சந்தோஷ்குமார் என்பவருக்க சொந்தமான விநாயகா ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ் மற்றும் பேட்டரி கடையின் பூட்டை உடைத்து உள்ளே சென்று 1) 150 AH பேட்டரிகள் –3 2) 88 AH பேட்டரிகள் –7 3) 80 AH பேட்டரிகள் –2 4) 150 AH UPS பேட்டரிகள் –3 5) 100 AH UPS பேட்டரிகள் –2 6) 80 AH UPS பேட்டரிகள் –3 7) 38 AH கார் பேட்டரி –1 ( மொத்தம் 19 பேட்டரிகள்) மதிப்பு சுமார் ரூ.14000/– ஆகியவற்றை திருடி சென்றதாக பல்லடம், காவல் நிலைய காவல் ஆய்வாளர் இவ்வழக்கின் எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 457, 380ன் கீழ் தாக்கல் செய்த குற்ற அறிக்கையை பார்வையிட்டு பரிசீலனை செய்து அவ்வாறே வழக்கு இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப் பட்டது.

(2)எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது அவருக்கு அரசு

தரப்பில் சார்ந்து நின்ற ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207 ன் கீழ் இலவசமாக கொடுக்கப்பட்டு, மேலும் போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு எதிரிகள் மீது இதச பிரிவுகள் 457, 380 ன் கீழன குற்றச் சாட்டு வனைந்து குற்றம் பற்றி விளக்கி கூறி வினவியபோதும் எதிரிகள் குற்றத்தையும், குற்றச்சாட்டுகளையும் மறுத்து கூறி வழக்கு விசாரணையை வேண்டினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

(3)அரசுதரப்பில் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்கும் வகையில், அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களும்அ.சா.பொ.1 ம் குறியீடு செய்யப் பட்டது. அரசுத் தரப்பு சாட்சிகள் பின்வருமாறு:

<u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

4)இவ்வழக்கானது பாலக்காடு, எரட்டைக்குளம் அஞ்சள், அப்பபிள்ளையூரை சேர்ந்த சந்தோஷ்குமார் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தொடரப் பட்டுள்ளது. அவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 அவரது புகாரில் தான் மேற்கண்ட விலாசத்தில் சுமார் 5 வருடமாக குடியிருந்து கொண்டு 4/49 KPR காம்பளக்ஸில் ஸ்ரீ விநாயகா ஆட்டோ எலக்ட்ரிக் என்ற பெயரில் லாரி, கார் பேட்டரி ரீசார்ஜ் மற்றும் விற்பனை கடை வைத்துள்ளதாகவும் கடந்த 15.03.2014 ம் தேதி இரவு சுமார் 9.30 மணிக்கு எடையை பூட்டிவிட்டு வீட்டுக்கு சென்றுவிட்டதாகவும் கடந்த 16.03.2014 ம் தேதி காலை 9.00 மணிக்க கடையை திறக்கலாம் என கடைக்கு வந்து பார்த்தபோது கதவில் இருந்த பூட்டு உடைக்கப்பட்டிருந்தது உள்ளே திறந்து பார்த்தபோது உள்ளே ரீச்சார்ச்சுக்கு வைக்கப்பட்டிருந்த சுமார் 18 பேட்டரிகளும் விற்பனைக்காக வைத்திருந்த 1 பேட்டரியையும் காணவில்லை என்றும் மேற்படி பேட்டரிகளை யாரோ செட்டரின் பூட்டை உடைத்து திருடி சென்றுவிட்டார்கள் திருடுபோன பேட்டரிகளின் விவரம் 1) 150 AH பேட்டரிகள்

–3 2) 88 AH பேட்டரிகள் –7 3) 80 AH பேட்டரிகள் –2 4) 150 AH UPS பேட்டரிகள் –1 5) 100 AH UPS பேட்டரிகள் –2 6) 80 AH UPS பேட்டரிகள் –3 7) 38 AH கார் பேட்டரி –1 (மொத்தம் 19 பேட்டரிகள்) மேற்கண்ட திருடுபோன பேட்டரிகளை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டுள்ளது.

5)இவ்வழக்கு சம்பவம் பற்றி கேள்விப்பட்ட சாட்சியாக அ.சா.2 ராமசந்திரன் என்பவரும் பார்வை மகசர் சாட்சியாக அ.சா.3 சிவராமன் என்பவரும் எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது உடனிருந்த சாட்சியாக அ.சா.4 குமாரசாமி என்பவரும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

6)இவ்வழக்கின் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்த அ.சா.5 முருகேசன், சிறப்பு உதவிஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 16.03.2014 ம் தேதி 13.00 மணிக்கு பல்லடம் காவல்நிலைய சிறப்பு உதவிஆய்வாளராக நிலைய பொறுப்பு அலுவலில் இருந்த போது சந்தோஷ்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று பல்லடம் காவல்நிலைய குற்ற எண்.236/2014 பிரிவுகள் 457,380 இதசவின் கீழ் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் அசல் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் அன்றே 14.00 மணிக்கு வாதி சம்பவ இடத்தை அடையாளம் காட்ட சாட்சிகள் ராமன் மற்றும் சிவராமன் ஆகியோர்கள் முன்பு பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரிவரைபடம் தயார் செய்ததாகவும் சாட்சிகள் சந்தோஷ்குமார், ஹரிசங்கர், ராமசந்திரன், ராமன், சிவராமன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் புலன் விசாரணைக்காக காவல்ஆய்வாளர் சுப்பிரமணியம் அவர்கள் பார்வைக்கு வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

7)இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 ஜெயதேவி, காவல் ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 16.04.2020 ஆம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 236/2014 சட்டப் பிரிவு 457,380 இதச வழக்கில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.முருகேசன் முதல் கட்ட புலன் விசாரணை முடித்து தொடர் புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பை ஆய்வார் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கினை ஆய்வாளர் 08.08.2014 ஆம் தேதி புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 10.30 மணிக்கு அறிவொளி நகர் தொட்டியபிச்சி கோவில் பஸ்ஸ்டாப் அருகில் குற்ற வழக்கு சம்மந்தமாக எதிரிகளை தேடி கண்காணித்துக் கொண்டிருந்தபோது 1 ஆம் எதிரி கார்த்திக் என்பவர் தனது இடது பக்க தோள்பட்டையில் ஒரு பேட்டரியை வைத்து தூக்கிக் கொண்டும் அவருடன் 2 ஆம் எதிரிகளில் நாகேந்திரன் என்பவர் பேசிக்கொண்டும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தவர்கள் போலீசாரை கண்டவுடன் பேட்டரியை கீழே போட்டுவிட்டு ஓடு எத்தனித்தவர்களை போலீஸ் பார்டி சென்று விசாரிக்க அவர்கள் இருவரும் பல குற்ற வழக்குகளில் சம்மந்தப் பட்டவர்கள் என தெரியவந்து எதிரிகளை நாகேந்திரன் என்பவர் தன்னுடைய இடுப்பில் மூன்று செல்போன்களையும் ஒரு பிளாஸ்டிக் கவரில் போட்டு மறைத்து வைத்திருப்பது தெரியவந்தது என்றும் எதிரிகள் இருவரிடம் பேட்டரி மற்றும் செல்போன்கள் சம்மந்தமாக ஆய்வாளர் விசாரிக்க இருவரும் பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 236/2014 சட்டப்பிரிவு 457,380 இதச வழக்கில் பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 825/2014 சட்டப்பிரவு 457,380 இதச வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் என தெரியவந்ததால் இருவரையும் காலை 11.00 மணிக்கு பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 236/2014, சட்டப்பிரிவுகள் 457, 380 இதச வழக்கில் எதிரிகள் இருவரையும் அதே இடத்தில் வைத்து கைது செய்து. சாட்சிகள் குமார், மற்றும் குமாரசாமி ஆகியோர் முன்னிலையில் எதிரி

கார்த்திக் என்பவர் தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அவர்களிடம் இருந்து SF sony பேட்டரி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.7 மற்றும்8 என்றும் கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.9 என்றும் சாட்சிகள் குமார் மற்றும் குமாரசாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும் வழக்குச் சொத்தினை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு பி.ஆர்.எண். 108/2015 பெறப் பட்டுள்ளது என்றும் அந்த படிவம் 91 ஆ.த.சா.அ.10 என்றும் SF sony போட்டரி அ.சா.பொ.1 என்றும் இத்துடன் புலன் விசாரணை முடிக்கப்பட்டு 27.11.2014 ஆம் தேதி சட்டப்பிரிவுகள் 457,380 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக கூறப்பட்டுள்ளது.

<u>கு.வி.மு.சபிரிவு 313(i)(b)ன் கீழ் எதிரிகளிடம் வினவப்பட்ட வினாவிற்கான பதில் :</u>

8)அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.313(i)(b) பிரிவின் கீழ் வினவிய போது எதிரிகள் சாட்சிகள் அனைத்தையும் பொய் சாட்சிகள் என்றும், பொய் வழக்கு என்று தெரிவித்தும், மேலும் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததால் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று முடிக்கப்பட்டு இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

<u>9)அரசு தரப்பு வாதம்:</u>

அ.சா.1 முதல் அ.சா.4ன் சாட்சியங்கள் மூலம் எதிரிகள் மீதான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.5 மற்றும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 சாட்சியத்தின் மூலம் அரசுதரப்பு வழக்கு மற்றும் அரசுதரப்பு சான்றாவணங்கள் உறுதிப் படுத்தப் பட்டுள்ளது என்றும், எனவே அரசு தரப்பில் எதிரிகள் மீது பிரிவுகள் 457,380 இதசவின் கீழான குற்றம் நிரூபணம் செய்யப்

பட்டு விட்டதாகவும், எனவே, எதிரிகள் மீது பிரிவுகள் 457,380 இதசவின் கீழான குற்றத்திற்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

<u>எதிரிகள் தரப்பு வாதம் :</u>

10)இவ்வழக்கில் குற்றயிறுதியறிக்கை மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப் பட்ட ஆவணங்களின் வாயிலாக எதிரிகள் மீது சுமத்தப்பட்டு இருக்கும் குற்றச் சாட்டுகள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு 240ன் கீழ் வினவிய போது, இவ்வழக்கு பொய் வழக்கு என்று கூறி, அரசுதரப்பு வழக்கை மறுத்துள்ளார்கள். எதிரிகளுக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.313(i)(b)பிரிவின் கீழ் எதிரிகளிடம் வினவியபோது, சாட்சிகள் அனைத்தும் பொய் சாட்சிகள் என்றும், இவ்வழக்கு சொத்துக்கள் எதிரிகளிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டது என்பதும், எதிரிகள் தான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதும் அரசுத் தரப்பில் தகுநிலை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், அதனால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:</u>**

**11)**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பில் நிரூபிக்கப் பட்டுள்ளதா? என்று பார்க்கும்போது, அ.சா.1 சந்தோஷ்குமார் அவரது சாட்சியத்தில் கடந்த 15.03.014ம் தேதியன்று இரவு 9 மணிக்கு அவரது கடையை சாத்திவிட்டு வீட்டிற்கு சென்று விட்டு மறுநாள் காலை 9 மணிக்கு கடைக்கு வந்து பார்த்தபோது கடையின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது உள்ளே சென்று பார்த்தபோது கடையில் இருந்த யூபிஎஸ் பேட்டரி மற்றும் வண்டிகளுக்கான பேட்டரி மொத்தம் 19 ஐ காணவில்லை என்றும் அதனால் காவல்நிலையம் சென்று அ.சா.ஆ.1 புகார் கொடுத்ததாகவும் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தார்கள் காணாமல் போன அவருடைய பொருட்கள் இதுவரை

கிடைக்கவில்லை என்றும் சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரித்தனர் ஒரே ஒரு பேட்டரி மட்டும் இருப்பதாக சொன்னதாக அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

12)இவ்வழக்கு சம்பவம் பற்றி கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.2 ராமசந்திரன் அவரது சாட்சியத்தில் அ.சா.1 ஐ தெரியும் என்பதாகவும் அவருடைய கட்டிடத்தில் பேட்டரி கடை வைத்துள்ளதாகவும் சுமார் 5 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு அவர்கள் மருத்துவ மனைக்கு சென்றுவிட்டதாகவும் மறுநாள் வந்து பார்த்தபோது கடையின் பூட்டு உடைக்கப்பட்டு பேட்டரி யாரோ திருடிச் சென்றுவிட்டார்கள் அக்கம்பக்கம் விசாரித்து பார்த்துவிட்டு அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக கூறியுள்ளார்.

13)இவ்வழக்கின் பார்வைமகசர் சாட்சியான அ.சா.3 சிவராமன் அவரது சாட்சியத்தில் சுமார் 6,7 வருடத்திற்கு முன்பு காரணம்பேட்டையில் அ.சா.3 சலூன் கடை வைத்திருந்த சமயம் கடைக்கு அருகில் உள்ள பேக்கரி கடையில் திருட்டு போனது சம்மந்தமாக போலீசார் அங்கு வந்திருந்ததாகவும் போலீசார் அங்கு வந்து விசாரித்து கொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் போலீசார் அ.சா.3 ஐ விசாரித்ததாக கூறியுள்ளார்.

14)மேலும், அ.சா.3 அவரது குறுக்குவிசாரணையில் சலூன் கடை 13 வருடங்களாக வைத்துள்ளதாகவும் திருட்டு போன கடை உரிமையாளரை 8 வருடங்களாக தெரியும் என்றும் அ.சா.3 கையொபப்ம் செய்த பேப்பரில் ஏற்கனவே எழுதி வைக்கப் பட்டிருந்ததாகவும் அதில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று தெரியாது என்பதாக கூறியுள்ள நிலையில் அவரது சாட்சியத்தின் மூலம் அ.சா.ஆ.2 பார்வை மகசர் ஆவணமானது நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15)இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது உடனிருந்த சாட்சியான அ.சா.4 குமாரசாமி அவரது சாட்சியத்தில் கடந்த 27ம் தேதி 11 வது மாதம் சுமார் 6,7 வருடங்களுக்கு முன்பு போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்ததாகவும் ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்று அந்த கையொப்பம் அ.சா.ஆ.3 மற்றும் அ.சாஆ.4 என்று கூறி அரசுதரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

16)இவ்வழக்கில் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவான பதில் எதுவும் பெறப் படவில்லை என்றும் மேலும், இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்யும்போது உடனிருந்த சாட்சியான அ.சா.4 அரசுத்தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் வழக்கு சம்பவம் குறித்தோ எதிரிகளை அடையாளப்படுத்தியோ எவ்வித சாட்சியமும் இடம் பெறாத நிலையில் இவ்வழக்கின் எதிரிகள் தான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பது அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரிகள் மீதான குற்றச்சாட்டிலிருந்து எதிரிகளை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

17)முடிவில், எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 457, 380ன் கீழான குற்றங் களிலிருந்து குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து குவிமுச 248(1) பிரிவின் கீழ் இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

18)இவ்வழக்கு சொத்தான அ.சா.பொ.1 SF Sonic என்ற பேட்டரி ஒன்று இந்நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு இந்நீதிமன்ற பி.ஆர். எண்.108/2015 ஆக பி.ஆர் செய்யப் பட்டுள்ளதை அதன் உரிமையாளர் உத்தரவு தேதியிலிருந்து 1

மாதத்திற்குள் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் அரசுக்கு ஆதாயமாக்கப்படும் என இதன்மூலம் உத்தரவிடப் படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் வருடம் மார்ச் திங்கள் 26ம் நாள் வியாழக் கிழமை அன்று அவையறிய திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.03.26 17:40:28 +0530

நீதித்துறைநடுவர்,
பல்லடம்.

**அரசுத் தரப்பு சாட்சியங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 19.12.2019 | திரு.சந்தோஷ்குமார் த/பெ. ராஜாமணி – புகார்தாரர் |
| அ.சா.2 | 19.12.2019 | திரு.ராமசந்திரன் த/பெ.பழனிச்சாமி – சம்பவம் பற்றி கேள்விப் பட்ட சாட்சி |
| அ.சா.3 | 04.01.2021 | திரு.சிவராமன் த/பெ. சின்னசாமி – பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.4 | 16.03.2021 | திரு.குமாரசாமி த/பெ. சேமலை – எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தபோது உடனிருந்த சாட்சி |
| அ.சா.5 | 27.01.2026 | திரு.முருகேசன், சிறப்பு உதவி ஆய்வாளர் – முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரி |
| அ.சா.6 | 27.01.2026 | திருமதி.ஜெயதேவி, காவல்ஆய்வாளர் –புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 /அ.சா.1 | 16.03.2014 | புகார் |
| அ.சா.ஆ.2 /அ.சா.3 | 16.03.2014 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3 /அ.சா.4 | 27.11.2014 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.4/அ.சா.4 | 27.11.2014 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5/அ.சா.5 | 16.03.2014 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 /அ.சா.5 | 16.03.2014 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 /அ.சா.6 | 27.11.2014 | 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.8 /அ.சா.6 | 27.11.2014 | 2ம் எதிரி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப் பட்ட பகுதி |
| அ.சா.ஆ.9 /அ.சா.6 | 27.11.2014 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.10 /அ.சா.6 | 27.11.2014 | படிவம் 91 |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்**

**அ.சா.பொ.1** – SF Sonic என்ற பேட்டரி ஒன்று

**எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை**

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.03.26 17:40:34 +0530

நீதித்துறைநடுவர்,
பல்லடம்.

**குறிப்பு:**

1)எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்பட்டது.

2)வழக்கு விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்து வந்தார்கள்.

3)வழக்கு முடிவின் விவரம் தக்க காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

4)வழக்கின் விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப் படவில்லை.

5)தீர்ப்பின் நகல் மேன்மைமிகு திருப்பூர், தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப் படுகிறது.